# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,301 — 1922 ம் ௵ மார்கழிமீ 15 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

---

1896 ம் வருஷத்தின் 20 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 30 ம் பிரிவின் 19 ம் உபபிரிவின்படி நுவரஎலியா சீர்திருத்தல் சபையால் உண்டாக்கப்பட்டு அதிகார மந்திரசபையின் ஆலோசனையோடு இலங்கை அரசாட்சியை நடத்தும் உத்தமனு ரவர்களுடைய அனுமதிப்பெற்ற துணைச்சட்டம்.

உத்தமனுர் கட்டளைப்படி,

இராஜாங்க லிகிதருடைய கந்தோர்,
கொளும்பு, 1922 ம் ௵ மார்கழிமீ 13 ௳.

பி. கோஸ்பரூ,
வேலைபார்க்கும் இராஜாங்க லிகிதர்.

வீட்டுக் கஞ்சல் குப்பைகளை அகற்றவும் ஒருவழிப்படுத்தவும் உண்டாக்கப்பட்ட துணைச்சட்டங்கள்.

1. நுவரஎலியா சீர்திருத்தல் சபையின் தீர்மானத்துடன் அக்கிராசனரவர்கள் எழுத்து மூலமாக அறிவித்தல் கொடுத்து ஒரு வீட்டின் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரனை அல்லது அதிற் குடியிருப்போனை அவ்விடத்தில் சேருங் கஞ்சல், குப்பை, சாம்பல், தூசி முதலிய அழுக்குகளை தனது சொந்த நிலத்திலே புதைக்க அல்லது போட்டுவைக்க அல்லது சுடக்கூடாதென்று கட்டளைபண்ண அதிகாரமுடையவராவர்.

2. ஒரு வீட்டின் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரனுக்கு அல்லது குடியிருப்போனுக்கு அவ்விடத்திற் சேரும் கஞ்சல், குப்பை, சாம்பல், தூசி முதலிய அழுக்குகளை தனது நிலத்திலே புதைக்க அல்லது சுட எழுத்தில் உத்தரவு கொடுக்க அக்கிராசனரவர்களுக்கு அதிகாரமுண்டு.

3. தனது சொந்த நிலத்தில் கஞ்சல், குப்பை, சாம்பல், தூசி முதலிய அழுக்குகளை புதைக்க அல்லது சுட அதிகாரம் பெருத ஒவ்வொருவரும் சீர்திருத்தல் சபையால் மேற்படி அழுக்குகளை அகற்ற ஒழுங்குசெய்ய வேண்டும்.

4. வருஷமொன்றிற்கு ரூபா 500 அல்லது அதற்கு மேற்பட வரி மதிக்கப்படும் ஒவ்வொரு வீட்டின் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரன் அல்லது குடியிருப்போன் மேற்படி இடங்களிலே சேருங் கஞ்சல் குப்பைகளை சீர்திருத்தல் சபையின் கூலியாட்களைக்கொண்டு சுத்தஞ் செய்வித்தால், மாதவீதம் முற்பணமாக சீர்திருத்தல் சபையால் தீர்மானிக்கப்படும் வரிப்பணங் கட்டவேண்டும். மேலே சொல்லப்பட்ட மாதவீத வரிப்பணம் அம்மாதத்தின் 10 ம் திகதி அல்லது அதற்குமுன் சீர்திருத்தல் சபைக்குக் கொடுபடாதிருந்தால் மேற்படி சபையின் அக்கிராசன ரவர்கள் இது விஷயத்தை நுவரஎலியா பொலீஸ் நீதிபதிக்குத் தெரியப்படுத்தி, மேற்படி நீதிபதி யவர்களால் விதிக்கப்பட்ட ஓர் தெண்டப் பணம் போல் அறவிடுவார்கள்.

பூமி விற்பனவைப்பற்றிய 59 ம் 60 ம் இலக்கப் பிரமாணங்களுக் கமைய மாடுமேய்ச்சற் றறையாகப் பாவிக்கக் கீழே காட்டப்படுங் கண்டங்களை விசேஷ குத்தகையில் தரும்படி கீழ்மாகாண மட்டுக்களப்பு டிஸ்திறிக்கில் கோரகல்லி மடுவிலிருக்கும் மெஸ் எப். ஆர். சேவியரிடமிருந்து கேள்விப்பத்திரம் நம்க்குக் கிடைத்திருக்கிறதென்று இத்தா லறிவிக் கப்படுகின்றது.

படத்திலக்கம் 5,698. குறிச்சி—சந்திவெளி (கோறளைப்பற்று.)

| காணியின் இல. | காணியின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|
| 8 | பாலையடித்தோணுக்காடு அல்லது பழங்கேணிக்காடு | காடு | 10 2 15 |
| 11 | பாலையடித்தோணுக்காடு | காடு | 35 3 37 |

இதிற் சொல்லிய திகதியிலிருந்து 6 கிழமைகளுக்குள்ளாக ஏன் இக்குத்தகையைக் கொடுக்கக் கூடாதென்ப தற்குப் போதிய நியாயங் கீழ்மாகாண அரசாட்சி ஏசன்றுத்துரைக்குக் காட்டாதிருந்தால் சொல்லப்பட்ட கண்டங்கள் அவருக்கு ஒரு வருஷத்திற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 1/— வீதம் 99 வருஷத் தவணைக்குக் கொடுக்கப்படும். அவரே அடுத்த காணிகளுக்கும் சொந்தக்காரனுக விருப்பதால் அக்காணிகளை மேய்ச்சற் றறைகளாக மாற்றக்கூடிய வசதியுள்ளவராயு மிருக்கிறார்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1922 ம் ஆண்டு மார்கழிமீ 8 ந உ.

பீ. ஹோஸ்பறோ,
அக்றிங் கொலோனியல் சக்கிறத்தார்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரமும் களுத்துறை தெற்கில் உண்டாக்கப்போ கும் பூந்தோட்டத்துக்கு ஓர் வழி இடுவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 17,622. குறிச்சி—களுத்துறை தெற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பாலகும்புற | தென்னந்தோட்டம் | ஜே. ஏ. தர்மரத்தினவின் பெண்ணும் இன்னொருவரும் | 0 1 16·5 |
| 2 | முடககவத்தை | ஒரு தென்னைகொண்ட நிலம் | ஜே. எல். விக்கிரம நாயகவின் பெண் | 0 0 5·1 |
| 3 | ஷை | ஒரு மல்லிகம்கொண்ட நிலம் | ஜே. ஏ. தர்மரத்தினவின் பெண் | 0 0 19·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ம் ஞூ வெபுறுவரி மாசம் 2 ந் தேதியிலன்று காலை 10 மணிக்குக் களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப் பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் சாதிக்கும் உரித்து களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1922 ம் ஞூ டிசம்பர்மீ 8 ந உ.

ஈ. ற்றீ. மிலிங்டன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் களுத்துறை வடக்கிலுள்ள முதலாங் குறுக் குத் தெருவை, அகலிப்பதும் திருத்துவதும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணி களை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 18,061. குறிச்சி—களுத்துறை வடக்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொஸ்பணவத்தை | தென்னந்தோட்டமும், கட்டடத்தின் ஓர் பகுதியும் | சீ. சீ. பெரேரு | 0 0 12·8 |
| 2 | ஷை | கட்டடத்தின் ஓர் பகுதிகொண்ட வெண்தறை | ஷை | 0 0 2·78 |
| 3 | பசநாயக வத்தை | தென்னந்தோட்டம் | ஈ. பீ. எம். பெர்ணுந்து வின் பெண் | 0 0 13·3 |
| 4 | ஷை | ஷை | ஷை | 0 0 23·76 |
| 5 | ஷை | ஷை | ஷை | 0 0 2·08 |
| 6 | மாவத்தபத்தே உஸ்வத்தை அல்லது பெலேவத்தை | தென்னந்தோட்டமும், மதிலில் ஓர் பகுதியும் | ஏச். எவ். டீ. பொன்சேகா வும் மறுபேரும் | 0 0 0·31 |
| 7 | ஷை | ஷை | ஷை | 0 0 0·31 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தி னது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என் பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ௵ ஜனவரி மாசம் 26 ௳ தேதியிலன்று காலை 10 மணிக்குக் களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1922 ௵ டிசம்பர்௴ 7 ௳.

ஈ. ற்றீ. மிலிங்டன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ௵ இலக்கச் சட்டத்தினது 7 ௵ பிரிவின் பிரகாரம் கறலியாத்தை ஆண்பாடசாலைக்கு விளையாட்டிடத்திற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 7,411. குறிச்சி—வெலிகொடபொல, தும்பனை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கனகவத்தை .. | தோட்டம் .. | டவுள்யு. எம். எம். கீன்பண்டா .. | 0 | 1 | 21·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ௵ பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ௵ பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ௵ ஜனவரிமாசம் 8 ௳ தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கலகெதற றெஸ்றகவுசில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டி கச்சேரி,
1922 ௵ டிசம்பர்௴ 15 ௳.

டபிள்யு. எல். கின்டர்சிலி,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ௵ இலக்கச் சட்டத்தினது 7 ௵ பிரிவின் பிரகாரம் வழி ஒன்று சரிபண்ண என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடம் நம்பர் 12,196. அம்பாந்தொட்டை நகரம்.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | — .. | வெண் நிலம் .. .. | ஏ. அல். ஹமீட் .. | 0 | 0 | 1·42 |
| 2 | — .. | ஷை .. .. | பாவா லெப்பே மய்மூன் .. | 0 | 0 | 0·59 |
| 3 | — .. | ஷை .. .. | ஏ. அல். ராபியம்மா .. | 0 | 0 | 0·63 |
| 4 | — .. | போகமில்லாத காணி குஞ்னிக்கி பாவிளைசெய்த வீட்டின் துண்டு | படபதிகே அல்விஸ் த ஸில்வாவும் ரன்தகேதோனகதரிணு | 0 | 0 | 0·81 |
| 5 | — .. | போகமில்லாத காணி குஞ்னிக்கி பாவிளை செய்த ஓட்டுவீட்டின் துண்டு | சின்ன மரைகாறின் மனைவி சாய்பு பாதுமுத்து சிங்ஹவன்சா | 0 | 0 | 0·55 |
| 6 | — .. | வெண் நிலம் .. .. | ஆமளமரக்கான் செய்னம்பு .. | 0 | 0 | 0·85 |
| 7 | — .. | ஷை .. .. | பக்கீர் பாவா ஒஸன்சாய்பு .. | 0 | 0 | 0·65 |
| 8 | — .. | ஷை .. .. | உதுமாலெப்பே ஜொஹரா அம்மா காசிலமரக்காற் சுலைஹா அம்மா | 0 | 0 | 0·65 |
| 9 | — .. | ஷை .. .. | ஏ. டப்லிவ். சிங்ஹவன்சாவும் சல்கியாளேஞவும் | 0 | 0 | 0·67 |
| 10 | — .. | ஷை .. .. | ஏ. அம். சபுறஅம்மா .. | Q | 0 | 0·61 |
| 11 | — .. | ஷை .. .. | யூசுப் காறிம் .. | 0 | 0 | 0·75 |
| 12 | — .. | ஷை .. .. | கே. முகம்மது இப்ருகீனும் மற்றவர்களும் | 0 | 0 | 0·12 |
| 13 | — .. | ஷை .. .. | யூசுப்காறினும் மறுபேரும் .. | 0 | 0 | 0·33 |
| 14 | — .. | ஷை .. .. | கே. முகம்மது இப்ருகீனும் மறுபேரும் | 0 | 0 | 0·31 |
| 15 | — .. | ஷை .. .. | ஏ. அல். முகம்மதும் மறுபேரும் | 0 | 0 | 0·35 |
| 16 | — .. | ஷை .. .. | ஏ. அல். அம். பக்கீற்சாயிபு .. | 0 | 0 | 0·20 |
| 17 | — .. | ஷை .. .. | தாசிம் சாயிபு .. | 0 | 0 | 0·12 |
| 18 | — .. | ஷை .. .. | காசிம் பாவா அல்மனுசி .. | 0 | 0 | 0·69 |
| 19 | — .. | ஷை .. .. | அப்துல் லெதிப்ராபியதும்மா .. | 0 | 0 | 0·67 |
| 20 | — .. | ஷை .. .. | டீ. ஆற். பக்கீர் .. | 0 | 0 | 0·15 |
| 21 | — .. | ஷை .. .. | ஜெமால் கமற்தீனும் யூசுப்தீனும் | 0 | 0 | 0·80 |
| 22 | — .. | ஷை .. .. | அஸ். ஏ. மவ்லானவும் மறுபேரும் | 0 | 0 | 0·34 |
| 23 | — .. | ஷை .. .. | சாயிபுதாசினும் செய்யது அலி மவ்லான | 0 | 0 | 0·29 |
| 24 | — .. | ஷை .. .. | அஸ். ஏ. மவ்லான .. | 0 | 0 | 0·37 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ௵ பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ௵ பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1923 ம் ௵ ஜனவாரி மாசம் 17 ௳ தேதியிலன்று 2 மணிக்கு அம்மாந்தோட்டைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்மாந்தோட்டைக் கச்சேரி,
1922 ம் ௵ டிசம்பர்மீ 8 ௳.

அம். ஏ. யங்.
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

### சுகாதாரசங்க விளம்பரம்.

#### புத்தளம் நகர் வரிப்பணம்.

1898 ம் வருஷத்திய 30-வது பிரிவின் பிரகாரம் புத்தளம் நகர் சுகாதாரச்சங்க முன்னேற்றத்தை கருதி, புத்தளம் நகர் சுகாதாரச்சங்க மாயத்திற்குள்பட்ட நிலங்களுக்கும் எல்லா வீடுகளுக்கும் கட்டடங்களுக்கும் வருஷாந்தரம் கிடைக்கும் லாபத்தில் நூற்றுக்கு 4 விகிதம் 1923 ம் வருஷத்திற்கு கட்டும்படியாக புத்தளம் சுகாதார சீர்திருத்தச் சங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவ் வரிப்பணக்காலம் 1923 ம் ஆண்டு தைமீ 1 ௳ தேதி துவக்கம் மார்கழிமீ 13 ௳ தேதி வரைக்கும் 12 மாதங்களுக்கு நடக்கும்.

புத்தளம் லோக்கல்போட் கந்தோரில்,
1922 ம் ௵ மார்கழிமீ 7 ௳.

எம். கே. டி. சேண்டஸ்,
லோக்கல்போட் அக்கிராசனர்.

---

#### புத்தளம் டவுன் தலைவரி.

1884 ம் ௵-த்து 31 ம் இலக்கச் சட்டம் நிறைவேறுதிருந்தால் வீதிகளையும் வேறு போக்குவரவுகளுக்கு வழங்கும் வழிகளையும் தாபரிப்பதற்கு வேலை செய்யவேண்டியவர்களாகிய புத்தளம் பட்டணத்துள்ளே வசிக்கும் ஒவ்வொரு ஆண்பிள்ளை மேலும் 1923 ம் வருஷத்திற்கு ஒரு வரி நியமிக்கப்பட வேண்டுமென்றும் அது இதனால் விதிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வரி ஆறு நாள் வேலைசெய்வதினால் அல்லது அவ்வேலைக்குப் பிரதியாக இரண்டு ரூபாய் பணம் 1923 ம் வருஷம் பங்குனிமீ 31 ௳ திகதியில் அல்லது அத்தேதிக்கு முன் கொடுப்பதினால் இறுத்துத் தீர்க்கப்பட வேண்டியது. அத்தேதிக்குப்பின் இரட்டிப்பாய் கொடுக்கவேண்டியதாகும்.

புத்தளம் லோக்கல்போட் கந்தோரில்,
1922 ம் ௵ மார்கழிமீ 7 ௳.

எம். கே. டி. சேண்டஸ்,
லோக்கல்போட் அக்கிராசனர்.

---

#### 1923 ம் ௵ மிருகங்களுக்கும் எல்லாவித ரதங்களுக்கும் வரி.

இதனால் அறிவிப்பது புத்தளம் சுகாதாரச் சங்கத்தின் 36-வது பிரிவின் 13 ம் நிம்பர் 1898 ம் வருஷக் கட்டளைச் சட்டப்படி கீழ்க்காணப்பட்ட வரியை புத்தளம் சவுக்கிய சீர்திருத்தச் சங்கத்தார் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதாவது குதிரைக்கரத்தை, மாட்டுக்கரத்தை, றேஸ்கரத்தை, ரிக்சோ, கைகரத்தை, தண்ணீர்கரத்தையும், மோட்டோ பைசிக்கல் தவிர மற்ற எல்லா பயிஸ்கல்களும், எல்லா குதிரைகளுக்கும், போணி, மாடு, நாய், கழுதைகளுக்கும் கீழ்க்கண்ட வரியை ஏற்படுத்தியிருக்கிறார்கள், அதாவது :—

| | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| குதிரைக்கரத்தை | ஒன்றுக்கு | .. .. | 5 | 0 |
| இரட்டைமாட்டுக்கரத்தை | ,, | .. .. | 4 | 0 |
| ஒத்தைமாட்டுக்கரத்தை | ,, | .. .. | 2 | 0 |
| ரிக்சோ அல்லது றேஸ்கரத்தை | ,, | .. .. | 2 | 0 |
| கைகரத்தை | ,, | .. .. | 2 | 0 |
| கையால் இழுக்கும் தண்ணீர்கரத்தை | ,, | .. .. | 1 | 0 |
| குதிரை அல்லது போணி | ,, | .. .. | 2 | 50 |
| மாடு அல்லது கழுதை | ,, | .. .. | 0 | 50 |
| பயிசிக்கல் | ,, | .. .. | 1 | 0 |
| நாய் | ,, | .. .. | 1 | 0 |

புத்தளம் லோக்கல்போட் கந்தோரில்,
1922 ம் ௵ மார்கழிமீ 7 ௳.

எம். கே. டி. சேண்டஸ்,
லோக்கல்போட் அக்கிராசனர்.

---

### உத்தியோக சம்மந்தமில்லாத அறிவித்தல்.

இன்றைக்கு மூன்று மாதத்தின்பின், நீர்கொழும்பு டிஸ்திறிக்கைச்சேர்ந்த அழுத்கூர்க் கோறளை தூணுககபம்றுத் தோப்பிலிருக்கும் மள்கண்காணுமலாகே மக்சிமஷ் லூசியன் சில்வாவாகிய நான் 1907 ம் வருஷம் முதலாம் நொம்பர் கட்டளைச்சட்டத்தின் எட்டாம் பிரிவின் பிரகாரம் றெஜிஸ்றர் ஜென்றல் அவர்கட்கு என்னை யாழ்ப்பாண டிஸ்திறிக் பிரிவில் சிங்களப்பாஷையில் நொத்தாரிஸ் பணிவிடைபார்க்க விடும்படி விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தாலறிவிக்கிறேன்.

1922 ம் வருஷம் மார்கழிமாசம் 9 ௳ திகதி.

இப்படிக்கு,
எம். எம். எல். சில்வா.

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.